**கூடுதல் மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம் மற்றும்**
**கூடுதல் சார்பு நீதிமன்றம், தென்காசி**

**முன்னிலை : திரு.எஸ்.முருகவேல், பி.ஏ., பி.எல்.,**
**செயலாளர், தென்காசி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு**
**கூடுதல் மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயர்**
**மற்றும் கூடுதல் சார்பு நீதிபதி (முழு கூடுதல் பொறுப்பு)**

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18 ஆம் நாள் புதன்கிழமை**
**(திருவள்ளுவராண்டு 2053 ஸ்ரீ விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 04–ஆம் நாள்)**

**மோட்டார் வாகன விபத்து கோருரிமை அசல் மனு எண்.110/2021**
(CNR.No.TNTS04-000399-2021)

தென்காசி மாவட்டம், தென்காசி தாலுகா, பாவூர்சத்திரம், கல்லூரணி, சின்னத்தம்பி நாடார்பட்டி, சர்ச் தெரு, கதவு எண்.11/78 என்ற முகவரியில் குடியிருக்கும் தங்கராஜா ஞானமுத்து அவர்கள் குமாரர், 29 வயதுள்ள அந்தோணி பொன்ராஜ்

... மனுதாரர்

/எதிர்/

1. தென்காசி மாவட்டம், தென்காசி தாலுகா, பாவூர்சத்திரம், கல்லூரணி, தெற்குத் தெரு, கதவு எண்.4/11/78 என்ற முகவரியில் குடியிருக்கும் தங்கராஜா அவர்கள் குமாரர், (வயது தெரியாது) ஞானமுத்து

2. திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தாலுகா, பாவூர்சத்திரம், மெயின்ரோடு, பி.எம்.சி. காம்ப்ளக்ஸ் முதல் தளம், கதவு எண்.14/720–18, 19 என்ற முகவரியில் அலுவலகம் கொண்டிருக்கும் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், அதன் கிளை மேலாளர் மூலம்

... எதிர்மனுதாரர்கள்

| | | |
|---|---|---|
| மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 10.02.2020 |
| மனு கோப்புக்கு எடுக்கப்பட்ட நாள் | : | 13.02.2020 |
| மனு உத்தரவு நாள் | : | 18.03.2026 |

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.18 18:18:40 +0530

இந்த மனுவானது, கடந்த 18.02.2026 அன்று என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K.P. குமார் அவர்களும், 2 ஆம் எதிர்மனுதார் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M. முகம்மது சலீம் அவர்களும் முன்னிலையாகியும், 1 ஆம் எதிர்மனுதார் தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லாததாலும், 1 ஆம் எதிர்மனுதாரை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால், மேற்படியாரைப் பொறுத்து தோன்றா தரப்பினராக தீர்மானிக்கப்பட்டும், இரு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள்வரை எனது பரிசீலனையில் இருந்துவந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## தீர்வளிப்பு

இந்த மனுவானது, மனுதாரரால் மோட்டார் வாகனச் சட்டம் பிரிவுகள் 140 மற்றும் 163 (A)–ன்கீழ் எதிர்மனுதார்களிடமிருந்து இழப்பீடாக ரூ.15,00,000/– கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்**

கடந்த 07.03.2018 ஆம் தேதி, காலை சுமார் 07.45 மணிக்கு, இந்த மனுதார், TN76 AE 0209 Bajaj Platina என்ற இரு சக்கர வாகனத்தில், ஆவுடையானூர் – சின்னநாடானூர் செல்லும் மெயின் ரோட்டில், மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி, சின்னநாடானூர் ஊரின் மேல்புறம் உள்ள பேன்ஸி கடைக்கு மேற்கே மெயின்ரோட்டில், மெதுவாகவும், கவனமாகவும், சாலை விதிகளை கடைபிடித்தும் ஓட்டிச் சென்றுகொண்டிருந்தபோது, மேற்படி மனுதார் ஓட்டிவந்த வாகனத்திற்கு முன்னால் TVS XL Heavy Duty என்ற இரு சக்கர வாகனத்தை ஓட்டிவந்த இனம் தெரியாத நபர், மேற்படி வாகனத்தை, அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், சாலைவிதிகளை மதிக்காமலும் ஓட்டிவந்து, திடீரென சைகை எதுவும் செய்யாமல், எதிர்பாராதவிதமாக வலதுபுறமாக மேற்படி வாகனத்தினை திருப்பியதால், மனுதாரின் வாகனம் மேற்படி முன்னால் சென்றுகொண்டிருந்த வாகனத்தின்மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது. அதில் மனுதாருக்கு நெற்றியில் உள்ள மண்டை ஓடு எலும்பு முறிவும், தலை உச்சியில் மண்டை ஓடு கீரலும் மற்றும் உடம்பு முழுவதும் ரத்தக் காயங்களும் ஏற்பட்டன. உடனடியாக

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.18 18:18:51 +0530

மனுதாருக்கு பாவூர்சத்திரத்தில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சையளிக்கப்பட்டு, அதன்பின் மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலியில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் உள்நோயாளியாக சிகிச்சை மேற்கொண்டார். விபத்திற்கு, விபத்தின்போது மனுதார் ஓட்டிவந்த வாகனத்திற்கு முன்னால் TVS XL Heavy Duty என்ற இரு சக்கர வாகனத்தை ஓட்டிவந்த இனம் தெரியாத நபரே காரணமாவார். மனுதார் ஓட்டிச்சென்ற வானத்தின் உரிமையாளர் 1 ஆம் எதிர்மனுதார் ஆவார். அவரது வாகனம் 2 ஆம் எதிர்மனுதார் காப்பீட்டு கழகத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. விபத்திற்கு முன்பு மனுதார் பால்வியாபாரம் செய்து வந்து, மாதம் ஒன்றுக்கு ரூ.3,330/– வருமானம் பெற்று வந்தார். விபத்திற்கு பின்பு மனுதாரால் முன்புபோல் எவ்வித வேலையும் செய்ய இயலவில்லை. எனவே, மனுதாரருக்கு, எதிர்மனுதார்கள் இழப்பீடாக ரூ.15,00,000/– கொடுக்கக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>2 ஆம் எதிர்மனுதாரரின் எதிருரையின் சுருக்கம்</u>

மனுதாரரின் மனு உண்மையல்ல. மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு சம்பவம் நடைபெறவில்லை. மனுதார் தன் மனுவில் குறிப்பிடும் TVS XL Heavy Duty என்ற இரு சக்கர வாகனத்தை ஓட்டிவந்த இனம் தெரியாத நபர் என்பது கற்பனை கதாபாத்திரமே தவிர வேறு யாரும் இல்லை. இவ்விபத்திற்கு முக்கிய காரணம் மனுதாரின் அதிவேகம், அஜாக்கிரதை, கவனக்குறைவுதான். மேலும், மனுதாரே விபத்திற்கு காரணம் என்பதால், விபத்து சமயத்தில் TN76 AE 0209 என்ற இரு சக்கர வாகனத்தினை ஓட்டிச்சென்ற Rider மனுதாரே ஆவார். காப்பீடு விதிகளின்படி Rider Policy Coverage கிடையாது என்பதால், இந்த எதிர்மனுதார், மனுதாருக்கு இழப்பீட்டு தொகை கொடுக்க கடமைப்பட்டவரில்லை. மனுதார் ஓட்டிய வாகனம் மனுதாருக்கு பாத்தியப்பட்டது என, காவல்நிலையத்தில் கொடுத்த புகாரிலேயே மனுதார் குறிப்பிட்டுள்ளார். மேற்படி வாகனத்தினை மனுதாரே உரிமையாளர் நிலைமையில் உபயோகப்படுத்திவிட்டு, இழப்பீடு பெறுவதற்காக பொய்யாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரின் வயது, வருமானம், தொழில் மற்றும் அவருக்கு ஏற்பட்ட காயங்கள், அதற்கு மனுதார் மேற்கொண்ட மருத்துவ சிகிச்சைகள் ஆகியவைகளை மனுதாரே தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் மூலம் நிரூபணம் செய்யவேண்டும். கோரியுள்ள இழப்பீட்டு தொகையும், அதற்கு கேட்டுள்ள வட்டி விகிதமும்

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.18 18:18:57 +0530

அபரிமிதமானவை. மற்றபடி மனுதார் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவைகள் ஆகும். அவை அனைத்தும் இந்த எதிர்மனுதாரால் மறுக்கப்படுகின்றன. எனவே, மனுவை தள்ளுபடி செய்யவேண்டும்.

4. மனுதாரின் மனுவுரை, 2 ஆம் எதிர்மனுதாரின் எதிருரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்து, இம்மனுவின் தீர்வுக்காக கீழ்க்கண்ட பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன

**<u>ஆய்வுக்குரிய பிரச்சினைகள்</u>**

1. இந்த விபத்தானது யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது?

2. இம்மனுவில் மனுதாரருக்கு இழப்பீட்டுத் தொகை கிடைக்கத்தக்கதா?

3. அவ்வாறு கிடைக்கத்தக்கது எனில் எந்த எதிர்மனுதாரர் இழப்பீட்டுத் தொகையை வழங்க கடமைப்பட்டவர்?

4. மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய மொத்த இழப்பீடு தொகை எவ்வளவு?

5. மனுதாரர் தரப்பில், மனுதாரர் திரு. அந்தோணிபொன்ராஜ் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.9 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர்கள் தரப்பில், திருமதி. செல்வி எ.சா.1 ஆகவும், திரு. முத்துக்குமார் என்பவர் எ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். எதிர்மனுதார்கள் தரப்பில் எ.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இம்மனுவில் மூன்றாம் தரப்பினர்கள் தரப்பு சான்றாவணம்–1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது, இந்த விபத்தானது, TVS XL Heavy Duty என்ற இரு சக்கர வாகனத்தை ஓட்டிவந்த இனம் தெரியாத நபரால் ஏற்பட்டுள்ளது என்றும், இதைப் பொறுத்து 1 ஆம் எதிர்மனுதார், மனுதார்

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.18 18:19:03 +0530

ஓட்டிச்சென்ற வாகனத்தின் உரிமையாளர் என்றும், 2ஆம் எதிர்மனுதார் அதன் காப்பீட்டாளர் என்றும், இந்த வழக்கைப் பொறுத்து மனுதாருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு 1, 2 எதிர்மனுதார்கள் சேர்ந்தோ, தனித்தனியாகவோ இழப்பீட்டு தொகை வழங்கக் கடமைப்பட்டவர்கள் என்றும், இந்த மனுவை அனுமதிக்கலாம் என வாதிட்டார்.

7. கற்றறிந்த 2ஆம் எதிர்மனுதார் தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது, இந்த விபத்தைப் பொறுத்து, இனம் தெரியாத நபர் ஓட்டிச்சென்ற இரு சக்கர வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவினாலும், அஜாக்கிரதையாலும் ஏற்பட்டது என மனுதாரே ஒப்புக்கொண்டுள்ள நிலையில், இதைப் பொறுத்து Hit and Run என்ற முறையில் விபத்து ஏற்பட்டுள்ளதால், இதைப் பொறுத்து மனுதாரும் தனது மனுவில் ஒப்புக்கொண்டுள்ளதால், இதைப் பொறுத்து இந்தத் தீர்ப்பாயத்தில் மனு தாக்கல் செய்ய இயலாது என்றும், இதைப் பொறுத்து உரிய அரசு அதிகாரியிடம் முறையிட்டு, மனுக் கொடுத்து, அதனடிப்படையில் மனுதார் தனக்குரிய இழப்பீட்டை பெற்றுக்கொள்ளலாம் என்றும், இந்த மனுவில் 2ஆம் எதிர்மனுதாரின் காப்பீட்டு நிறுவனமானது, விபத்தின்போது மனுதார் ஓட்டிச்சென்ற 1ஆம் எதிர்மனுதாரின் வாகனத்தினை காப்பீடு செய்யப்பட்டுள்ள நிறுவனம் என்றும், இந்த விபத்தில் காயம் பெற்ற மனுதாருக்கு இந்த 2ஆம் எதிர்மனுதார் எந்தவித இழப்பீட்டு தொகையும் வழங்கக் கடமைப்பட்டவர் இல்லை என்றும், மனுவை தள்ளுபடி செய்யலாம் என வாதிட்டார்.

8. <u>பிரச்சனை எண்கள்.1 மற்றும் 2-க்கான தீர்வு</u>

இந்த மனுவைப் பொறுத்து, விபத்து யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது? என்பது குறித்தும், மனுதாருக்கு இழப்பீட்டு தொகை கிடைக்கத்தக்கதா? என்பது குறித்தும் பரிசீலனை செய்யும்போது, இந்த மனுவின் மனுதார் அந்தோணி பொன்ராஜ் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், கடந்த 07.03.2018 ஆம் தேதி, காலை சுமார் 07.45 மணிக்கு, தான், TN76 AE 0209 என்ற இரு சக்கர வாகனத்தில், ஆவுடையானூர் – சின்னநாடானூர் செல்லும் மெயின் ரோட்டில், மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி, சின்னநாடானூர் ஊரின் மேல்புறம் உள்ள பேன்ஸி கடைக்கு மேற்கே மெயின்ரோட்டில், மெதுவாகவும், கவனமாகவும், சாலை விதிகளை

MURUGAVEL
Digitally signed by MURUGAVEL
Date: 2026.03.18 18:19:10 +0530

கடைபிடித்தும் சென்றுகொண்டிருந்தபோது, தான் ஓட்டிவந்த வாகனத்திற்கு முன்னால் TVS XL Heavy Duty என்ற இரு சக்கர வாகனத்தை ஓட்டிவந்த இனம் தெரியாத நபர், மேற்படி வாகனத்தை, அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், சாலைவிதிகளை மதிக்காமலும் ஓட்டிவந்து, சைகை எதுவும் செய்யாமல், எதிர்பாராதவிதமாக திடீரென வலதுபுறமாக மேற்படி வாகனத்தினை திருப்பியதால், தான் ஓட்டிச்சென்ற வாகனம் மேற்படி முன்னால் சென்றுகொண்டிருந்த வாகனத்தின்மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டதாகவும், அந்த விபத்திற்கு மேற்படி TVS XL Heavy Duty என்ற இரு சக்கர வாகனத்தை ஓட்டிவந்த இனம் தெரியாத நபரே காரணம் என்றும் சாட்சியமளித்துள்ளார். மேலும், அவர் தனது சாட்சியத்தில், மேற்படி விபத்தினால் தனக்கு நெற்றியில் உள்ள மண்டை ஓடு எலும்பு முறிவும், தலை உச்சியில் மண்டை ஓடு கீரலும் மற்றும் உடம்பு முழுவதும் ரத்தக் காயங்களும் ஏற்பட்டதாகவும், உடனடியாக பாவூர்சத்திரத்தில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் தனக்கு முதலுதவி சிகிச்சையளிக்கப்பட்டு, அதன்பின் மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலியில் உள்ள தனியார் மருததுவமனை ஒன்றில் உள்நோயாளியாக சிகிச்சை மேற்கொண்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

9. இதுசம்பந்தமாக மனுதார் கொடுத்த புகாரின் அடிப்படையில் பாவூர்சத்திரம் காவல்துறையினர் வழக்கு பதிவு செய்துள்ளனர். அந்த முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையை கவனமாக பரிசீலனை செய்தபோது, அதில், மனுதார், கடந்த 07.03.2018 ஆம் தேதி, காலை சுமார் 07.45 மணிக்கு, தான் ஓட்டிச்சென்ற வாகனத்தில் கவனமாக சென்றுகொண்டிருந்தபோது, தான் ஓட்டிவந்த வாகனத்திற்கு முன்னால் TVS XL Heavy Duty என்ற இரு சக்கர வாகனத்தை ஓட்டிவந்த இனம் தெரியாத நபர், மேற்படி வாகனத்தை, அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், சாலைவிதிகளை மதிக்காமலும் ஓட்டிவந்து, சைகை எதுவும் செய்யாமல் திடீரென வலதுபக்கமாக திரும்பியதால் விபத்து ஏற்பட்டு, அதில் தான் காயமடைந்ததாகவும், இதுகுறித்து நடவடிக்கை எடுக்கக்கோரி புகார் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த வழக்கைப் பொறுத்து, ம.சா.ஆ.1ல், குற்ற எண்.122/2018–ல், இனம் தெரியாத நபர் எனக் குறிப்பிட்டும், குற்றப்பிரிவு இ.த.ச., 279 மற்றும் 337 எனக் குறிப்பிட்டும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்த

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.18 18:19:16 +0530

மனுதார் காயமடைந்து, சிகிச்சையிலிருந்ததாக, சிகிச்சை சம்பந்தமான ஆவணங்கள் ம.சா.ஆ.6 மற்றும் ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், கடந்த 17.03.2018 தேதியில் சிகிச்சைக்காக சேர்ந்து, 20.03.2018 தேதியில் சிகிச்சை முடிந்து வந்ததாக ம.சா.ஆ.9 மனுதாரின் மருத்துவ விடுவிப்பு அறிக்கையும், மனுதாரின் விபத்து பதிவேடு ம.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

10. இவ்வாறு இந்த விபத்தானது, தன்னுடைய கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றும், முன்னால் சென்ற இரு சக்கர வாகனமான, TVS XL Heavy Duty என்ற வாகனத்தை ஓட்டிவந்த இனம் தெரியாத நபர், மேற்படி வாகனத்தை, அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், சாலைவிதிகளை மதிக்காமலும் ஓட்டிவந்து, சைகை எதுவும் செய்யாமலும், திடீரென எதிர்பாராதவிதமாக வலதுபுறமாக திருப்பியதால் விபத்து ஏற்பட்டதாக மனுதார் சாட்சியமளித்து, அதற்கான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு மனுதார் தரப்பில் கூறியுள்ளபடி, இனம் தெரியாத ஒரு நபர், தன் முன்னால் ஒரு இரு சக்கர வாகனத்தை ஓட்டிச்சென்று, விபத்து ஏற்படக் காரணமாக இருந்தார் எனக் கூறப்பட்டுள்ளது. இந்த மனுவைப் பொறுத்து, மனுதார் 1,2 எதிர்மனுதார்கள் மீது மனுவினை தாக்கல் செய்துள்ளார். இதை மறுக்கும் 2 ஆம் எதிர்மனுதார் தரப்பில், மனுதார் ஒப்புக்கொண்டபடியே, ஏதோ ஒரு வாகனம் இடித்துவிட்டதாகக் கூறுவது கற்பனையான ஒன்று என்றும், இல்லாத ஒரு நபரை இருப்பதாகக் காண்பித்து இந்த மனுவை மனுதார் தாக்கல் செய்துள்ளதாகவும், இதுசம்பந்தமாக காவல்துறையினரும், விபத்தை ஏற்படுத்திய இனம் தெரியாத நபரை கண்டறிய இயலவில்லை என குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் வாதிடப்பட்டது.

11. இதுசம்பந்தமாக, 2 ஆம் எதிர்மனுதார் தரப்பில், எ.சா.1 செல்வி என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், பாவூர்சத்திரம் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிவதாகவும், குற்ற எண்.122/2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதி அறிக்கையை தாக்கல் செய்வதாகவும், அந்த குற்ற இறுதி அறிக்கையில், விசாரணை முடித்து குற்றவாளியை கண்டுபிடித்து, வழக்கினை முடிவு

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.18 18:19:22 +0530

செய்ய இயலாததாக காரணம் கூறப்பட்டு, இறுதியறிக்கை முடிக்கப்பட்டுள்ளது என்றும், நாளது தேதிவரை விபத்திற்கு காரணமாக குற்றவாளி யார் என தெரியவில்லை எனக் குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ளார். இதுசம்பந்தமாக சாட்சிகளை விசாரித்த காவல்துறையினர், விபத்தானது, இனம் தெரியாத நபரின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்றும், இதுநாள் வரை அந்த நபரை கண்டறிய இயலவில்லை என்றும், அவ்வாறு ஏதேனும் தகவல் கிடைத்தால் மேல்நடவடிக்கை எடுக்கப்படும் எனக் குறிப்பிட்டு, கடந்த 31.05.2018 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன்பிறகு, இதுநாள்வரை 8 ஆண்டுகளாக மேற்படி இனம் தெரியாத நபரை கண்டுபிடித்ததாக மனுதார் தரப்பில் கூறப்படவில்லை. மேலும், இந்த மனுவானது, மோட்டார் வாகனச் சட்டம் பிரிவுகள் 140 மற்றும் 163(A)ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவைப் பொறுத்து, மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 163(A)ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், யாருடைய கவனக்குறைவினால் விபத்து ஏற்பட்டது என நிரூபணம் செய்யவேண்டிய அவசியம் எதுவும் இல்லை.

12. இந்த மனுவைப் பொறுத்து, 1ஆம் எதிர்மனுதார் வாகனத்தின் உரிமையாளர் எனக் கூறப்பட்டுள்ள நிலையில், 2ஆம் எதிர்மனுதார் காப்பீட்டு நிறுவனத்தின் ஊழியர் முத்துக்குமார் எ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். எ.சா.2 தனது சாட்சியத்தில், இந்த மனுதாரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாக மனுதார் தரப்பில் கூறப்படாத நிலையிலும், மனுதார் ஓட்டிச் சென்ற TN76 AE 0209 என்ற இரு சக்கர வாகனத்தைப் பொறுத்து மனுதாரே ஓட்டிச் சென்றதால், அதற்கான ப்ரீமியம் எதுவும் செலுத்தப்படவில்லை என்றும், முதல் தகவல் அறிக்கையில் தன்னுடைய வாகனம் எனக் கூறிவிட்டு, முதல்நிலை விசாரணை வாக்குமூலத்தில் 1ஆம் எதிர்மனுதாருக்கு சொந்தமான வாகனம் என மனுதார் முரண்பட்டு குறிப்பிட்டுள்ளார் என்றும் சாட்சியமளித்துள்ளார். மேலும், 2ஆம் எதிர்மனுதாரின் தரப்பின்படி, அந்த இரு சக்கர வாகனத்தின் உரிமையாளருக்கு மட்டுமே தனியாக, Personal Accident Coverage என்ற முறையில் காப்பீடு செலுத்தப்பட்டுள்ளது என்றும், அதைப் பொறுத்து இந்தத் தீர்ப்பாயத்தில் வழக்கு தாக்கல் செய்ய முடியாது எனக் கூறப்பட்டுள்ளது.

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.18 18:19:27 +0530

13. இந்த மனுவைப் பொறுத்து, மனுதார் தரப்பில் கூறியுள்ளபடி, முன்னால் சென்ற வாகனம் திடீரென வலதுபுறமாக திரும்பியதால் விபத்து ஏற்பட்டதாகக் கூறும் நிலையில், இந்த மனுவில், 1ஆம் எதிர்மனுதாரின் வாகனத்தை மனுதார் ஓட்டிச் சென்றுள்ளார். அதேபோல், 2ஆம் எதிர்மனுதார், 1ஆம் எதிர்மனுதாரின் வாகனத்தின் காப்பீட்டு நிறுவனமாகும். மேலும், மனுதார் தரப்பின்படி, இடித்த வாகனத்தின் பதிவு எண் மற்றும் வேறு எந்த விபரமும் சொல்லப்படாமல், வெறுமனே TVS XL Heavy Duty என்று மட்டுமே கூறப்பட்டுள்ளது. ஆனால், இதை மறுக்கும் 2ஆம் எதிர்மனுதார் தரப்பில், அவ்வாறான வாகனம் எதுவும் மோதியதாக எடுத்துரைக்கப்படவில்லை என்றும், கற்பனையான விபரங்களைக் கூறி புகார் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் மறுத்துக் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்த விபத்தைப் பொறுத்து, கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் வந்து, மனுதார் வாகனத்தின்மீது இடித்த வாகனத்தை ஓட்டிய நபரையும், அவ்வாகனத்தையும் கண்டறிய இயலவில்லை என எ.சா.1 செல்வி சாட்சியமளித்து, அதுசம்பந்தமான ஆவணங்கள் மூ.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அதேபோல், காவல்துறையினர் இறுதியாக விசாரணை செய்து, இதுநாள்வரை அந்த நபரை கண்டறிய இயலவில்லை என இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ள நிலையில், இதைப் பொறுத்து "Hit and Run" என்ற வழக்காகவே கருதப்படவேண்டும். அவ்வாறான "Hit and Run" வழக்குகளைப் பொறுத்து, மோட்டார் வாகனச் சட்டம் பிரிவுகள் 140 மற்றும் 163(A)–ன்படி இழப்பீடு பெறலாம். ஆனால், அந்த இழப்பீட்டைப் பொறுத்து, இந்தத் தீர்ப்பாயத்தில் பெறமுடியுமா? எனப் பார்க்கும்போது, கீழ்க்கண்ட முன்வழித்தீர்ப்பில் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, ***National insurance company ltd, Gopichettipalayam -vs- Munusamy*** **decided by Hon'ble High court of Madras in C.M.A.No. 1192 of 2016 dated 22.10.2020 as follows,**

> *"10. In a case of hit and run, Section 140 of the Motor Vehicles Act provides remedy for the victims. In alternate, under Section 163 A of the Motor Vehicles Act, the insured without proving negligence of the third party vehicle can lay claim on the principles of no fault. In such cases, the compensation is payable when death or total permanent disability occurs to the claimant.*

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.18 18:19:35 +0530

*11. In the instant case, the insurance coverage is for own damage and third party basic. Even assuming that the premium Rs.70.50 paid under own damage basic will cover the claimant who is the owner of the vehicle and had sustained injury due to the negligence of unknown hit and run vehicle, to maintain the claim petition, the nature of the injury sustained must be a total permanent disability.*

*12. Looking at the discharge summary marked as Ex.P8, this Court finds that the treatment given is under "under 'C' arum commiunted left fibula fracture stabilized with 'K' wire, right foot dorsum would SSG done". The said injuries does not fall under the definition of permanent total disability. Therefore, the award of the Tribunal under Section 166 of the Motor Vehicles Act, is contrary to law and terms of insurance policy. Hence, liable to be set aside.*

*13. It is to be noted that in the recent judgment M/s The Cholamandalam MS General Insurance Company Limited v. Ramesh Babu dated 02.09.2020, which has been referred by this Court in the earlier part of the judgment, the learned Single Judge has observed that the omission on the part of the Tribunal to verify the claim and the nature of the insurance policy at the first instance unnecessarily drives the claimant to the Court without knowing that the petition is not maintainable before the Tribunal and has given direction to the Court below to verify the claim petition with reference to the nature of the policy and determine its jurisdiction at the inception. This Court re-affirms the above observation of the learned Single Judge.*

*14. Accordingly, the judgment and decree dated 25.02.2015 passed by the Motor Accident Claims Tribunal/Sub Court, Gobichettipalayam in M.C.O.P.No.186 of 2014 is set aside and the Civil Miscellaneous Appeal is allowed with liberty to the claimant to approach appropriate forum seeking compensation under Section 140 of the Motor Vehicles Act."*

மேற்கண்ட முன்தீர்ப்பின் அடிப்படையில், மேற்கண்ட "Hit and Run" வழக்குகளைப் பொறுத்து, விபத்தினால் கொடுங்காயம் அடைந்த நபர், மாவட்ட ஆட்சியரை அணுகி, அதற்கான சிறப்பு திட்டத்தின்கீழ் உள்ள இழப்பீட்டினை பெற உரிமை படைத்தவர் ஆவார். அதைப் பொறுத்து இந்தத் தீர்ப்பாயத்தில் மனுதாருக்கான இழப்பீட்டை நிர்ணயிக்க இயலாது. அதேபோல், இந்த மனுவைப் பொறுத்தும், மனுதார் மீது மோதிய வாகனமானது எது என்றே தெரியாத நிலையில், இந்த வழக்கை "Hit and Run" வழக்காக கருதி, இந்த

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.18 18:19:40 +0530

மனுவைப் பொறுத்து இந்த மனுதார், இந்தத் தீர்ப்பாயத்தில் எந்தவித இழப்பீடும் பெற உரிமைப்படைத்தவர் இல்லை என முடிவு செய்யப்படுகிறது. மேலும், இந்த மனுதார், உரிய அரசு அலுவலரிடம் முறையிட்டு, அதன்பேரில் இழப்பீட்டு தொகை பெறுவதற்கு இந்த மனுவின் முடிவு எந்தவித தடையும் ஏற்படுத்தாது. எனவே, இந்த மனுவைப் பொறுத்து, மனுதார் இந்தத் தீர்ப்பாயத்தில் இழப்பீடு கோர இயலாது என்றும், இந்தத் தீர்ப்பாயத்தால் மனுதாருக்கான இழப்பீட்டை நிர்ணயம் செய்ய இயலாது என்றும் முடிவு செய்து, மனுதாருக்கு இம்மனுவில் எப்பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என முடிவு செய்து, அவ்வாறே இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படுகிறது.

14. <u>பிரச்சினை எண்கள்.3 மற்றும் 4–க்கான தீர்வு</u>

மேலே பிரச்சினை எண்கள்.1 மற்றும் 2–க்கு ஏற்கனவே இத்தீர்ப்பாயம், வழக்கு விபத்தானது ஒரு "Hit and Run" வழக்கு என முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில், மனுதாருக்கு எவ்வித இழப்பீட்டு தொகையும் கிடைக்கத்தக்கதல்ல என்றும் முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில், இவ்விரு பிரச்சினைகளுக்கும் தீர்வு காண தேவையில்லை என முடிவு செய்து, அவ்வாறே இப்பிரச்சினைகளுக்கு முடிவு செய்யப்படுகிறது.

15. இறுதியாக, மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. தரப்பினர்கள் அவரவர்கள் செலவுத்தொகைகளை அவரவர்களே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

As per the Judgment of the Honourable High Court in Tr.Cmp Nos.264 to 281 of 2020 M/s. Cholamandalam Ms General Insurance Company Ltd Versus Ayyanar and others, dated 11.05.2020. No separate decree passed.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் எடுக்கப்பட்டு, பின்னர் விரிவாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு,

MURUGAVEL
Digitally signed by MURUGAVEL
Date: 2026.03.18 18:19:47 +0530

என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 18ஆம் தேதியன்று திறந்த தீர்ப்பாயத்தில் அவையறிய பகரப்பட்டது.

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.18 18:19:56 +0530

**கூடுதல் மோட்டார் வாகன விபத்து**
**கோருரிமை தீர்ப்பாயர் மற்றும் கூடுதல் சார்பு நீதிபதி,**
**தென்காசி (மு.கூ,பொ.)**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>**

ம.சா.1 திரு. அந்தோணி பொன்ராஜ்

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 18.03.2018 | முதல் தகவல் அறிக்கையின் ஒளிநகல் |
| ம.சா.ஆ.2 | 01.04.2018 | மருத்துவ சிகிச்சை சான்று மற்றும் காயச்சான்றின் ஒளிநகல் |
| ம.சா.ஆ.3 | – | காப்பீட்டு சான்றிதழின் ஒளிநகல் |
| ம.சா.ஆ.4 | – | மனுதாருக்குரிய ஓட்டுநர் உரிமத்தின் ஒளிநகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளது) |
| ம.சா.ஆ.5 | – | மனுதாருக்குரிய ஆதார் அடையாள அட்டையின் ஒளிநகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளது) |
| ம.சா.ஆ.6 | – | மருத்துவ ரசீதுகள் |
| ம.சா.ஆ.7 | – | மருத்துவர் அளித்த மருத்துவ பரிந்துரை சீட்டுக்கள் |
| ம.சா.ஆ.8 | 18.03.2018 | பார்வைமகசரின் ஒளிநகல் |
| ம.சா.ஆ.9 | 20.03.2018 | மருத்துவ விடுவிப்பு அறிக்கை |

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u>**

எ.சா.1 திருமதி. செல்வி

எ.சா.2 திரு. முத்துக்குமார்

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| எ.சா.ஆ.1 | – | காப்பீட்டு சான்றிதழின் உண்மை ஒளிநகல் |

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.18 18:20:03 +0530

**<u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u>** இல்லை

**<u>மூன்றாம் தரப்பினர் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| மூ.சா.ஆ.1 | – | பாவூர்சத்திரம் காவல்நிலைய குற்ற எண்.122/2018 வழக்கு சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களின் ஒளிநகல்கள் |

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.18 18:20:14 +0530

**கூடுதல் மோட்டார் வாகன விபத்து**
**கோருரிமை தீர்ப்பாயர் மற்றும் கூடுதல் சார்பு நீதிபதி,**
**தென்காசி (மு.கூ,பொ.)**

**கூடுதல் சார்பு நீதிமன்றம், தென்காசி**

**இயக்கூர்தி விபத்து கோருரிமை அசல் மனு எண்.110/2021**

**தீர்ப்புரை (அசல்/வரைவு)**

**நாள் 18.03.2026**